பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 20 ஞாயிற்றுக்கிழமை (04-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 169

# இடதுசாரிகள் - லலித் குழுவினரால் அரசுக்குள் தொடர்ந்து நெருக்கடி!

## வெவ்வேறு திசைகளில் இருதரப்பும் இழுபறி

கொழும்பு, ஒகஸ்ட் 4

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்குள் கருத்து முரண்பாடு முற்றி வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மரபுவழி இடதுசாரிகள் எனக் கருதப்படும் சமசமாஜக் கட்சியினர், கம்யூனிஸ்ட் கட்சியினர் போன்றோர் ஒரு தரப்பிலும், இடது சாரிக் கொள்கைகளுக்கு மாறுபாடானவர்கள் எனக் கருதப்படும் லலித் அணியினர் (புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியினர்) மற்றொரு தரப்பிலும் இருந்து கொண்டு ஆளும் ஐக்கிய முன்னணி அரசுக்குள் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் முக்கிய அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருடன் இந்த இரு தரப்பும் பல்வேறு விடயங்களில் முரண்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

தற்போது அவசரமாகவும் அவசியமாகவும் தீர்க்கப்பட வேண்டிய விடயமாக அரசின் தலைமைப் பீடம் கருதும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்

கொழும்பு, ஒக. 4

பரந்தனில் நிலை கொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் ஏவுகணைகளாலும், சிறு ஆயுதங்களினாலும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இத் தாக்குதல்களின்போது படையினர் தரப்பில் இழப்பு ஏற்படவில்லை என்றும் —

படையினர் பரந்தனில் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-3)

## காலிமுகத்திடல் வருவோர் மீது சோதனை

கொழும்பு, ஒக. 4

கொழும்பு, காலிமுகத் திடலுக்கு வரும் சகலரையும் சோதனைக்கு உட்படுத்துமாறு பொலீஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அரச உடைமைகளை நாசமாக்குவதற்கும் —

காலிமுகத் திடலுக்கு வரும் பிரமுகர்கள் பற்றிய விவரங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடை செய்வது குறித்து தீர்மானம் இல்லை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 4

''விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டுமா? இல்லையா? — என்பது குறித்துத் தீர்மானிக்க வேண்டியது அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பாகும். அவ்வியக்கத்தைத் தடைசெய்வது குறித்து அரசாங்கம் இதுவரை எந்தவித தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை.

— நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக முடிவு எடுப்பதற்காகக் கூட்டப்பட்டதாகக் கூறப்படும் எந்தவொரு கலந்துரையாடலிலோ அல்லது மாநாட்டிலோ தாம் கலந்துகொள்ளவில்லை என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த 23 மாத காலத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட நீதித்துறை மற்றும் சட்டத்துறை சார்ந்த திருத்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக நீதி அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் தாம் கூட்டிய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

(இ-3)

## தாண்டிக்குளத்தில் நேற்று போக்குவரத்து ஆரம்பம்

### 200 பேர் வவுனியா சென்றனர்

கொழும்பு. ஒக. 4

இரண்டு வாரங்களின் பின்னர் தாண்டிக்குளத்தில் மீண்டும் போக்குவரத்து ஆரம்பமாகி உள்ளது.

ஓமந்தையில் இருந்து சுமார் 200 பேர் வரை தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வர படையினர் நேற்று அனுமதித்தனர்.

ஆனால் 15 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள் எவரையும் வவுனியா வர நேற்றுப் படையினர் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## அத்தியாவசியப் பொருள்களுக்கு கிளிநொச்சியில் பெரும் தட்டுப்பாடு

### வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 4

''கடந்த 18ஆம் திகதிக்குப் பின்னர் வடக்கே உணவு லொறிகள் எதுவும் செல்லாததால் மாங்குளம், புதுக்குடியிருப்பு, மல்லாவி, துணுக்காய், நெடுங்கேணி உட்பட்ட பிரதேசங்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.''

வன்னி மாவட்ட புனரமைப்பு அணித்தலைவரும், வவுனியா அரச அதிபருமான திரு கே. கணேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம் பெயர்ந்தமக்கள் அரை.குறை வயிற்றுடன் பட்டினியில் வாடுகின்றனர் என்ற கவலை அளிக்கும் செய்திகள் வருகின்றன என்றும் —

கிளிநொச்சியில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் —

இவர்களும் தமக்குரிய நிவாரணப் பொருள்களைப் பெற முடியாது உள்ளனர் என்றும் — அவர் தெரிவித்தார்.

உணவு லொறிகள் வடக்கே செல்லாததால் இந்தநிலை ஏற்பட்டுள்ளது என்றும் —

உணவு லொறிகளை அனுப்பி வைக்க அதிகாரிகளும், செஞ்சிலுவை அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

## உணவு லொறிகள் இன்று கிளிநொச்சி புறப்படலாம்

வவுனியா, ஒக. 4

உணவுப் பொருள்களுடன் கடந்த இரண்டு வாரங்களாக வவுனியாவில் நின்ற லொறிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியாவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் புலிகளின் சுவரொட்டிகள்

திருகோணமலை, ஒக 4

ஈழத்தை வென்றெடுப்பதற்காக அனைத்து தமிழ் மக்களின் ஒத்துழைப்பையும் கோரி விடுதலைப் புலிகள் அமைப்பு திருமலை மாவட்டத்தில் சுவரொட்டிகளை ஒட்டி வருவதாக பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக '' தினமின '' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாப் பகுதியில் அளவைக்கன்னி என்ற ஊரிலுள்ள சகல மின்கம்பங்களிலும் வீதியோரத்திலுள்ள மரங்களிலும் தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன எனவும் — அச்சுவரொட்டிகளில் விடுதலைப் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத் திட்டத்தை முன்னெடுப்பதில் ஒருவருடமாக திண்டாடுகிறது அரசு

## அதிகாரப் பகிர்வு நிதர்சனமாகுமா?

அதிகாரப் பகிர்வுத்திட்டத்திற்கான ஆதரவைத் திரட்டுவதில் இலங்கை அரசு கடந்த 12 மாதங்களாகத் திண்டாடி வருகிறது. என்றாலும் அரசியல் வழி மூலம் சமாதானத் தீர்வைக் காணும் முயற்சியை இன்னமும் அது கைவிடவில்லை.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் புளோரா பொஸ்வால்ட் நேற்று தனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அரசு தனது அதிகாரப்பகிர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்து நேற்றோடு ஒரு வருடம் கழிந்தது.

பி. பி. ஸி. செய்தியாளர் மேலும் தெரிவித்ததாவது;-

இலங்கை அரசாங்கம் வைத்

(6ஆம்பக்கம் பார்க்க)

குவைத்தில் பாதிக்கப்பட்ட

# 75 ஆயிரம் இலங்கையர்களுக்கு ரூ. 160 கோடி நஷ்டஈடு கிடைக்கும்

கொழும்பு, ஒக 4

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 75 ஆயிரம் இலங்கையர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஐ. நா நஷ்டஈட்டு ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இதற்கமைய இலங்கையர்களுக்கு 160கோடி ரூபா நஷ்டஈடாகக் கிடைக்கும்.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்த சமயம் அநேக இலங்கையர் பாதிக்கப் பட்டனர்.

இவர்களில் 67 பேர் காயங்களுக்கு உள்ளானார்கள், அல்லது உயிரிழந்தார்கள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இதுவரை ஒருலட்சத்து 10 ஆயிரம் டொலர்களை நஷ்டஈடாக வழங்கியுள்ளது.

ஈராக்கிடம் இருந்து நிதி கிடைத்ததும் இந்த நஷ்டஈட்டை வழங்க இருப்பதாக ஐ. நா. நஷ்டஈட்டு ஆணைக்குழு தெரிவித்தது. [இ-3]

## தோட்டம் கொத்தியவர்கள் மிதி வெடியில் சிக்கினர்

### நீர்வேலியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 4

வாழைத் தோட்டத்தைக் கொத்திக் கொண்டிருந்தவர்களில் ஒருவரின் மண்வெட்டி மிதிவெடியில் பட்டதால் அது வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

நீர்வேலியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்செழுவைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசேந்திரம் (வயது 34) நீர்வேலி தெற்கு பூலசிட்டியைச் சேர்ந்த செல்லத்துரை ஜெயக்குமார் (வயது 28) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (இ-15)

## 99 மீன்பிடி வள்ளங்களுக்கு குருநகர்பகுதியில் அனுமதி

குருநகர், ஒக. 4

குருநகர்ப் பகுதியில் இருந்து நாளாந்தம் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் மீன்பிடிப்பதற்கு 99 மீன்பிடி வள்ளங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்கள் அந்தந்த நாட்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கொடிகளுடன் தினமும் தொழிலில் ஈடுபடுவார்கள்.

இந்நடைமுறையே பாஷையூர், கொழும்புத்துறை, மீனவர்களாலும் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது (இ-51)

## சண்டிலிப்பாயில் பங்கீட்டு அட்டை

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர்கள் மூலம் புதிய பங்கீட்டு அட்டைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (இ-100)

## நிவாரணம் பெறமுடியாது அவதி

யாழ். ஆறுகால்மடம் ஜே 88, கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 160 குடும்பங்கள் நிவாரணமின்றிக் கஷ்டப்படுகின்றன.

இவர்கள் நிவாரணம் பெறும் ப. நோ. கூ. சங்கங்கள் யாழ். நகருக்குள் அமைந்திருக்கின்றன.

கடந்த ஒருவாரமாக பொதுமக்கள் யாழ். நகருக்குள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளதால் காலையில் உரப்பைகளுடன் நிவாரணம் பெறச் செல்லும் இவர்கள் மாலை வரை தட்டா தெருவில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர். (இ-100)

## இலவச கணனி வகுப்பு

திருநெல்வேலி, கொம்பியூட்டர் சயன்ஸ் அக்கடமி வறிய மாணவர்களுக்கு இலவச கணனி வகுப்புகளை நடத்தி வருகிறது.

## வவுனியா அபிவிருத்திக்கு ரூ. 26 கோடி

வவுனியா மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு அரசாங்கத்திடம் இருந்து 26 கோடி 50 லட்சம் ரூபா கிடைத்துள்ளது என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

இவ்வாண்டுக்கான வேலைத்திட்டத்துக்கு இந்நிதி கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார். (இ-3)


D. M. I.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ENGLISH FOR COMMUNICATION

(தொடர்பு சாதனத்துக்குரிய ஆங்கிலம்)

Listening, Speech, Reading, Writing

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் தேடுபவர்கள், உத்தியோகத்தர்கள், உயர்தரவகுப்பு கற்ற மாணவர்கள் இவர்களுக்கான புதிய வகுப்பு

ஆரம்பம்: 05-08-96 திங்கள் பிற்பகல் 2-30

ஆசிரியர்: திரு. தெய்வதவபாலன்

Dpi. in — Eng R.E.L.C. (Singapore)

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(32118)



புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மாதாந்தப் பரீட்சை- 01

ஆண்டுகள்: 3,4,5,6,7,8,9,10, O/L வகுப்புகளுக்கான சகல பாடங்களும்.

ஆரம்பம்— 04-08-96 ஞாயிறு காலை 8 மணி

- ★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ வெளி மாணவர்கள் பரீட்சை எடுக்க அனுமதி வழங்கப்படும்.
- ★ பரீட்சை வினாத்தாள்கள் 07- 08- 96 க்குப் பின் வெளிவிடப்படும்.

— நிர்வாகி

(42123)



SHAMROCK

யாழ். ஈச்சமோட்டை வீதி

கலை, வர்த்தகம்

A|L 97, 98

பொருளியல் — Mr. இராஜேஸ்வரன்

| | |
|---|---|
| வர்த்தகம் Mr. பசில் | கிறிஸ்தவம் Mrs. A. மல்லிகா |
| கணக்கியல் Mr. சில்வெஸ்ரர் | தமிழ் Mr. நிதி |
| புள்ளிவிபரவியல் Mr. தவசேகர் | அளவையியல் ஆசிரியர் |

O/L Yr. 10, புலமைப்பரிசில் (ஆண்டு 4,5) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(42122)



பாரதி

சித்தன்கேணி

O/L DAY CLASS

ஆரம்பம்: 05-08-1996 காலை 8-00 மணி

விஞ்ஞானம் — திரு. தேவா

கணிதம் — திரு. நடா, திரு. சிவறூபன்

ஆங்கிலம் — திரு. தெய்வதவபாலன்

தமிழ் — திரு. சின்னத்தம்பி

சமூகக்கல்வி — திரு. ஆர்த்திகன்

வர்த்தகம் — திரு. அற்புதராஜா

பிரிவு - 2 மாலை நேரம் ஆண்டு 6 முதல் 11 வரை

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(42119)


## மரண அறிவித்தல்கள்

### மேரி ஸ்ரெலா யூஜின் ஜோன்சன்

(கலா)

மேரி ஸ்ரெலா யூஜின் ஜோன்சன் (கலா - ஆசிரியை கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயம்) 3-8-96 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் ஜோன்சன் மக்ஸியின் அன்பு மனைவியும், ஜொபித்தா, ஜான்சி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம்- நவநீதம் தம்பதிகளின் அன்பு மகளும், வில்பிரட் - ஜிலியா கிரேஸ் ஆகியோரின் அன்பு மருமகளும், யோகரட்ணம், காலஞ்சென்ற தம்பிரட்ணம், ராஜரட்ணம், நவரட்ணம், காலஞ்சென்ற பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரொபின்சன் ரெக்ஸ், பியூட்டி மாகிரட், நிக்சன் ஜெரால்ட், கொட்சன் ஜெரால்ட், மேரி மில்கிரிற் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவதீசனின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (4 - 8 - 96) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 46, கொழும்புத்துறை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஜோன்சன் மக்ஸி
(கணவர்)

(42121)

### Dr. N. T. சம்பந்தன்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக கடமைஆற்றியவருமான Dr. N.T. சம்பந்தன் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கத்தின் மூத்த புதல்வரும், சாரதாவின் அன்புக் கணவரும், சுபாஸ்சந்திரன், நாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தகப்பனும், ஜெயந்தி, றோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஜெயசீலன், அமராவதி கதிரவேற்பிள்ளை (மலேசியா), ஞானகலை நவரட்னம் (ஆனைப்பந்தியடி), சுந்தரம்மா மகாதேவா, புஸ்பவதி சர்வானந்தா ஆகியோரின் அன்புச்சகோதரரும், சுபாஷினி, கீதாஞ்சலி, நிருத்தனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:-
திருமதி சு. மகாதேவா

(42116)

### திருமதி வீரகத்தி முத்துப்பிள்ளை

நாரந்தனை தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது 30/3 அருளம்பலம் வீதி, அரியாலையை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி வீரகத்தி முத்துப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும், மகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, சரவணை றோ. க. க. பா.), நாகமுத்து (முன்னாள் பதவி நிலை உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச செயலகம்), காலஞ்சென்ற சண்முகலிங்கம் (செயலாளர், பிரதேச சபை, செட்டிகுளம்), இராசேஸ்வரி, அருளானந்தசிவம் (இத்தாலி), குமரகுருபரன் (குமரன்) (கணித ஆசிரியர், கொழும்பு), வென்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரவணபவன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), சிவபாக்கியம், ஈஸ்வரி, சண்முகரெத்தினம், ஜெயமணி (இத்தாலி), ஜெம்மா (இத்தாலி) ஆகியோரின் அருமை மாமியாரும், மலர்விழி (ஆசிரியை, வவுனியா), மங்கை (கனடா), யாழினி, கமலினி, வாசுகி, சஞ்சீவன், சிரோன், பிரிந்தா ஆகியோரின் பேர்த்தியாரும், கோபாலபிள்ளை (கிளிநொச்சி), சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04-08-96) ஞாயிறு மேற்படி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10-00 மணிக்கு சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாகமுத்து (மகன்)
சரவணபவன் (மருமகன்)
சண்முகரெத்தினம் (மருமகன்)

(42117)

# ஐந்து வருட உள்நாட்டு யுத்தம் சோமாலியாவில் முடிவடையலாம்!

## ஐடீட்டின் மரணத்தை அடுத்து அமெரிக்கா நம்பிக்கை

மொகடிஸு ஓக. 4

சோமாலியாவின் பிரதான கிளர்ச்சிக் குழுத் தலைவரான ஜெனரல் மொகமட் பரா ஐடீட் மரணமடைந்ததை அடுத்து கடந்த ஐந்து வருட கால உள்நாட்டு யுத்தம் முடிவடைவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பதாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

1991 ஆண்டு சோமாலியாவில் முகம்மது செய்யத் பாரேயின் ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கு மொகமட் பரா ஐடீட் முக்கிய காரணமாக இருந்தார்.

முகம்மது செய்யத் பாரேயின் மரணத்தின் பின் சோமாலியாவில் ஆட்சியைக் கைப்பற்ற மற்றொரு கிளர்ச்சிக் குழுத் தலைவரான மஹ்தி முகம்மது முயன்றபோது ஐடீட் தலைமையிலான படைகளுக்கும் மஹ்தி முகம்மது தலைமையிலான படைகளுக்கும் இடையில் சண்டை மூண்டது.

இந்த சண்டை காரணமாக சோமாலியாவில் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்து பெரும் பட்டினிச் சாவு ஏற்பட இருந்த சமயம் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி சட்டபூர்வமான ஆட்சி ஒன்றை ஏற்படுத்தும நோக்கத்துடன் 1992 இல் அமெரிக்கா இந்த விவகாரத்தில் தலையிட்டது. அமெரிக்கா தனது படைகளை சோமாலியாவுக்கு அனுப்பியது.

மஹ்தி முகம்மதுவின் படைகளுடன் சண்டையிட்டு வந்த ஐடீட் பின்னர் அமெரிக்கப்படையினரையும் தாக்க முற்பட்டார்.

அமெரிக்கப் படையினர் பலர் உயிரிழந்ததை அடுத்து 1993 இல் அமெரிக்கா தனது படைகளை விலக்கிக் கொண்டு ஐ. நா. சமாதானப் படைகளை அனுப்பியது.

ஐ. நா சமாதானப் படைகளும் ஐடீட்டின் படையினரால் தாக்கப்பட்டதை அடுத்து அந்தப்படைகளும் 1995இல் வாபஸ் பெறப்பட்ட பின்னர், ஐடீட் — மஹ்தி முகம்மது தலைமையிலான போட்டிக் கிளர்ச்சிக் குழுக்கள் தொடர்ந்து சண்டையிட்டு வந்தனர்.

அயல் நாடுகளின் சமாதான முயற்சிகளையும் ஐடீட் நிராகரித்து வந்தார்.

தற்போது ஐடீட் மரணமடைந்திருப்பதால், சமாதானத்தீர்வுஏற்படும்வாய்ப்புஏற்பட்டிருப்பதாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது

## காவிரிப்பேச்சு திங்களன்று!

சென்னை, ஓக. 3

காவிரிப்பிரச்சனை குறித்து தமிழக-கர்நாடக முதலமைச்சர்களின் முக்கிய சந்திப்பு நாளை திங்கட்கிழமை சென்னையில் நடைபெறும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

இதே விதம் அறிவித்தலை கர்நாடக அரசும் விடுத்தது. (இ-3)

## உலக அரங்கில்

## பூட்ரஸ்காலி தெரிவானால் அமெ. வீட்டோ செய்யும்

நியூயோர்க், ஓக. 4

ஐ. நா. பொதுச் செயலராக பூட்ரஸ் பூட்ரஸ் காலி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த தேர்வைரத்துஅதிகாரம் (வீட்டோ) மூலம் செயல் இழக்கச் செய்யும் அமெரிக்காவின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் வாரண் கிறிஸ்தோபர் நேற்று முன்தினம் வாஷிங்டன் நகரில் கூறினார்.

வேறு ஒரு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை ஐ. நாவுக்கு தான் கொடுக்க வேண்டிய பணபாக்கிகளைக் கொடுக்கப்போவதில்லை என்றும் அமெரிக்கா மிரட்டியுள்ளது. (இ-3)

## விசாரணையை ஒத்திவைக்கும் ராவின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கமறுத்தது

புதுடில்லி, ஓக. 4

தாம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனு மீதான தீர்ப்பு வழங்கப்படும்வரை லகுபாய் பதக் ஏமாற்றப்பட்ட வழக்கு விசாரணையை ஒத்திப்போட வேண்டும் என்று முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் கேட்டுக்கொண்டதை டில்லி பெருநகர் நீதிபதி பிரேம்குமார் நேற்று முன்தினம் ஏற்க மறுத்துவிட்டார்.

உயர் நீதிமன்றம் நரசிம்மராவின் சிறப்பு அனுமதி மனுவை எதிர்வரும் 12 ஆம் திகதி விசாரிக்கத் திகதி குறிப்பிட்டுள்ளதால், அந்த மனு மீதான இறுதித் தீர்ப்பு வெளிவரும்வரை வழக்கைத் தள்ளிப்போடலாம் என்று ராவின் வழக்கறிஞர் வாதிட்டார்.

தலைமைப் பெருநகர நீதிபதி தனது உத்தரவில் விசாரணையை நிறுத்திவைக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவு எதனையும் பிறப்பிக்கவில்லை என்றார்.

குற்றச்சாட்டின் மீது வாதம் செய்ய ஓகஸ்ட் 17ஆம் திகதியை பெருநகர நீதிபதி உத்தரவிட்டார். (இ-3)

## ஈரான்-லிபியா மீதான பிடியை இறுக்க முயற்சி

### அமெரிக்கா சட்டம் கொண்டுவரும்

வாஷிங்டன், ஓக. 4

சர்வதேச தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் எனக் குற்றம் சாட்டி ஈரான், லிபியா ஆகிய நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை இறுக்கமாக்க அமெரிக்கா விரைவில் சட்டம் கொண்டு வர விருக்கிறது.

ஆனால் கியூபா மீது அமெரிக்கா கொண்டுவர முயன்ற இத்தகைய சட்ட வரைவை ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பு எதிர்த்து நிராகரித்தது போலவே ஈரான், லிபியா நாடுகளுக்கு எதிரான இந்த சட்டவரைவையும் ஐரோப்பிய நாடுகள் எதிர்த்து நிராகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## அமெரிக்காவுக்கு எதிராக எண்ணெய் ஏற்றுமதி தடை

### ஈரான் கோருகிறது

எண்ணெய் உற்பத்தி செய்யும் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அமெரிக்கா மீது எண்ணெய் ஏற்றுமதி தடை விதிப்பதன் மூலம் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

இப்படி ஈரானிய அதிபர் அலி அக்பர் ரப்சன் சானி கூறினார்.

சர்வதேச வியாபாரத்தை அமெரிக்கா பிறநாடுகள் மீது ஆயுதமாகப் பயன்படுத்துகின்றதென்றால், நாமும் அதன் மீது அதே ஆயுதத்தைப்பயன்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது என்றும் அவர் கேட்டார். [இ-3]

## பொலீஸ் சிறையை முற்றுகையிட்டு பலஸ்தீனத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

ஜெருசலேம், ஓக4

'பலஸ்தீனத்தின், மேற்கு கரை நகரமான துல்காரம் பகுதியில் பொலீஸ் நிலையம் ஒன்றின் சிறையை பொதுமக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனை அடுத்து, இடம்பெற்ற மோதலில்பலஸ்தீனப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர்.

மேற்குக் கரையில் அமைந்துள்ள மற்றொரு நகரான நாபுல்ஸில் பலஸ்தீனப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திர வதைக்கு உள்ளான மொகமட் ஐமேயில் என்ற இளைஞன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதையடுத்தே, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

பாதுகாப்பு படையினருக்கு எதிராகக் கோஷமிட்டு வீதிகள் எங்கும் ஆர்ப்பாட்டம் நடத்திய அவர்கள் துல்காரம் நகரில் பொலீஸ் நிலைய சிறையை முற்றுகையிட்ட போதே கலவரம் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

''கைது செய்தவர்களை சித்திர வதை செய்யாதே, அவர்களை விடுதலை செய்'' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களையடுத்து அந்தப் பகுதி மூடப்பட்டு இராணுவ வலயமாக்கப் பட்டுள்ளது.

இது குறித்து பூரண விசாரணை நடத்துமாறு பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு பலஸ்தீன தீவிரவாத அமைப்பான ''ஹமாஸ்'' காரணம் என பலஸ்தீன பொலிஸார் தெரிவித்தனர். [இ-3]

## கதிர்காமரின் நிபந்தனை யதார்த்த பூர்வமற்றது

### தமிழ்க் கட்சிகள் கண்டனம்

கொழும்பு. ஓக. 4

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க முன் நிபந்தனையாக புலிகள் தமது பெரும்பான்மையான ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருந்ததை தமிழ் அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்ட எம். பியான யோசேப் பரராஜசிங்கம் கூறுகையில்:

யதார்த்த நிலைகளைப் பார்க்கையில் அரசு தான் புலிகளுடன் பேச வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

விடுதலைப் புலிகள் தவிர்ந்த பிற இயக்கங்கள் 1987 இல் ஆயுதங்களை ஒப்படைத்தன. அப்படி செய்த பின் நிலைமையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

அப்படியிருக்க புலிகளும் அவ்வாறு செய்து ஏமாறுவார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

இப்படி அவர் கூறினார்.

விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை தொடங்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என ரெலோ பேச்சாளர் ஸ்ரீகாந்தா கூறியுள்ளார். (இ-3)

## இலவச பாடப் புத்தகம்

தென்மராட்சிக் கல்விக் கோட்ட பாடசாலைகள் அனைத்துக்கும் இந்த ஆண்டுக்கான இலவச பாடநூல்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இப்பாடப் புத்தக கையளிப்பு — தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. சத்தியநாதன் மேற்பார்வையில் நடைபெறுகின்றது. (இ-31)

## வடமராட்சிப் பாடசாலைகளுக்கு தண்ணீர்த் தாங்கி, வாளி, பாத்திரம்

### கெயர் நிறுவனம் அன்பளிப்பு

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள 29 பாடசாலைகளுக்கு சர்வதேச கெயர் நிறுவனம் பிளாஸ்டிக்கிலான 15 கொள்கலன்களையும், (தண்ணீர்த் தாங்கிகள்), 190 வாளிகளையும், 700 குடிதண்ணீர்ப் பாத்திரங்களையும் வழங்கியுள்ளது.

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை கலட்டி றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, பருத்தித்துறை புனித தோமையார் றோ. க. மகளிர் பாடசாலை, தும்பளைசைவப் பிரகாச வித்தியாலயம், புற்றளை மகாவித்தியாலயம். அம்பன் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நாகர்கோவில் மகாவித்தியாலயம் ஆகிய 15 பாடசாலைகளுக்கும் தண்ணீர்க் கொள்கலன்களும், வாளிகளும், குடிதண்ணீர்ப் பாத்திரங்களும் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, குடத்தனை கரையூர் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரவெட்டி மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, அல்வாய் தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலை, நாகர் கோவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மாதனை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், அல்வாய் வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலை, யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் ஆகிய 14 பாடசாலைகளுக்கு வாளிகள், குடிதண்ணீர் கோப்பைகள் வழங்கப்பட்டன.

தண்ணீர்க் கொள்கலன்கள் அனைத்தும் ஒவ்வொன்றும் ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளக்கூடியவையாகும். (இ-118-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

செவ்வரத்தை, குறோட்டன் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (42107)

பாவித்த கடை விறாக்கையும், கண்ணாடி சோக்கேஸ் சும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 92, பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி. (41770)

### விற்பனையாகிறது

ஆசிரியர் கந்தையா.ஸ்ரீசந்தவேளின் நாடகமும், அரங்கியலும், கடந்தகால வினாத் தொகுப்புக்களும், எதிர்பார்க்கை வினா விடைகளும், விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.4 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/2701)

### ஆங்கிலம், கணிதம்

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 10,9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8 – 12, பின்னேரம் 3 - 6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (41776)

### புலமைப் பரிசில் 96

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. அடுத்த (11 வது) வெளியீடு: 04 – 08 - 96. BOND, INSTITUTES 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (42093)

### மேர்வின்ஸ்

றபர் சீல்கள், பிளாஸ்ரிக் போர்ட்டுகள், பாடசாலைச் சின்னங்கள், டேற் ஸ்ராம்புகள் செய்யும் மேற்படி எமது ஸ்தாபனம் தற்போது பழைய இடமான, கீழ் குறிக்கப்பட்ட விலாசத்தில் இயங்கி வருகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம் 91/1, மின்சார நிலைய வீதி, புதிய மார்க்கட் முன்பாக (மேல மாடி), யாழ்ப்பாணம் (42082)

### சகல பாடசாலைகளுக்கும்

ஆண்டு 1 முதல் ஆண்டு 13 வரையிலான சகல வகுப்புக்களுக்குமான மாணவர் தேர்ச்சி அறிக்கைகள் (REPORTS) எம்மிடம் அச்சிட்டு பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- ஏ. ஆர். எஸ். பிறிண்டேர்ஸ், புகையிரத நிலையவீதி, (நகரசபை அருகில்) சாவகச்சேரி (42110)

### வணிக புள்ளி விவரவியல்

A/L 97/98 வணிகப் புள்ளி விவரவியல், வர்த்தகம், கணக்கியல் பொருளியல் ஆகிய பாடங்கள் பட்டதாரி ஆசிரியர் குழுவினால் தனிப்பட்ட முறையிலும், குழுக்களாகவும் கற்பிக்கப்படவுள்ளது. ஆரம்பம் 4 - 8 - 96, மு. ப. 9.00 மணி. 32, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [42106]

### காணி விற்பனைக்கு

தற்போது லண்டனில் வசிக்கும் Dr. கதிர்காமதம்பிக்குச் சொந்தமான வீடு வளவு விற்பனைக்குண்டு மந்திகை சந்தியிலிருந்து வடக்கே போகும் பிரதான வீதியில், கிழக்குப் பக்கம் அமைந்த சீற் வீடு. ஐந்து நிலப்பரப்பு 10 குளி ஆகும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை. (42103)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து. வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

### ஆங்கிலப் பரீட்சைகள்

G.A Q., University. ஆங்கில ஆசிரியர் தேர்வு, O/L Distinction, Credit பெறுபேறடைய கற்பிக்கப்படும். B.Sc London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (41777)

### தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து (ஆங்கிலம், தமிழ்) வகுப்புக்கள் மீண்டும் நடைபெறுகின்றன. தொடர்பு:- ஆசிரியை, தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி (41768)

---

# தபால் மூலம் கல்வி

**3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆம் ஆண்டுகள்**

**G.C.E. O/L**
**G.C.E. A/L** ] எல்லாப் பாடங்களும்

கணித - உயிரியல் - கலை - வர்த்தக

**பிரிவுகள் - எல்லாப் பாடங்களும்**

★ விளக்க குறிப்புகள்
★ பயிற்சிகள்
★ பரீட்சைகள்
] — தபால் மூலம்

விபரங்கட்கு:

பதிவாளர்,

**BOND INSTITUTES**

த. பெட்டி; 140
யாழ்ப்பாணம்.

(42095)

---

# நகராட்சி மன்றம், பருத்தித்துறை
# பதவி வெற்றிடங்கள்

இந்நகராட்சிமன்றத்தில் பின்வரும் பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கீழ்க் குறிப்பிட்ட தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகள்

1. பதில் காரியாலய காரிய சகா
2. பதில் காவலாளி
3. பதில் அலுவலகத் தொழிலாளி
4. பதில் நூலக சேவகர்
5. பதில் வீதித் தொழிலாளி
6. பதில் சுகாதாரத் தொழிலாளி

தகைமைகள்

1. வயதெல்லை: —
   **18** வயதிற்கும் **40** வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். பதில் காவலாளி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் **25** வயதுக்கும் **40** வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகைமை: —
   1) மேற்குறித்த முதல் நான்கு பதவிகளுக்கான விண்ணப்பதாரர் எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   2) ஏனைய இரு பதவிகளுக்கான விண்ணப்பதாரர் ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3. வதிவிடத் தகைமை: —
   மேற்குறித்த முதல் நான்கு பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்நகராட்சிமன்றத்தின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தரமாக வசித்தல் வேண்டும். ஏனைய இரு பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்நகராட்சிமன்ற நிர்வாக எல்லைக்குள் அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் நிரந்தரமாக வசித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் பதில் சுகாதாரத் தொழிலாளிகளுள் மலகூடச் சுத்திகரிப்பு வேலையைச் செய்ய முன்வருபவர்களுக்கு வயதெல்லையும், கல்வித்தகைமையும் கவனிக்கப்படமாட்டாது. இவர்களுக்கு இலவச வதிவிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் **19 - 08 - 1996** ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன்பு எனக்குக் கிடைக்கக்கூடியதாக, நேரடியாகவோ அன்றித் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**க. சண்முகநாதன்,**
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 31-07-1996.

(சி-2710)

---

# நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## இலத்திரனியல்

**இரா. செல்வவடிவேல்**

ஆரம்பம்: **04. 08. 96** (ஞாயிறு)

— நிர்வாகி

(சி/2691)

---

உ

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்
கொக்குவில்

# கணக்குப் பரிசோதனை

மேற்படி ஆலயத்தின் 1995/ 96 நிதிவருடத்திற்குரிய (ஓகஸ்ட் ' 95 — ஜூலை' 96) வரவு செலவு அறிக்கையை பரிசோதனை செய்வதற்கு கணக்குப் பரிசோதிக்கும் நிறுவனங்கள் / பதிவு செய்யப்பட்ட கணக்குப் பரிசோதகரிடமிருந்து கேள்வி கோரப்படுகிறது.

விண்ணப்பங்கள் 15-08-1996 வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு ஆலயப் பொருளாளருடன் ஆலய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்,
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில்.

(42114)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 22 — 03 — 1960



இறப்பு: 16 — 08 — 1995

## அமரர் செல்லையா ஜெயகுலராசா
(செல்வம்)

**திதி: 04 – 08 – 1996**

கலங்காதே அம்மா! போய்
வருவேன் என விடைகேட்டாய்
கண்களை கண்ணீரால் குளமாக்கி
விடை தந்தோம். நீ இனி
வரமாட்டாய் என்ற செய்தி கேட்டு
ஆண்டு ஒன்றாகியும் நீ வருவாய்
என உன் நினைவால் ஏங்கி நிற்கின்றோம்.

செல்லையா பவளம்
குடும்பத்தினர்

புஸ்பா இல்லம்,
நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(41970)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 — 07 — 1975



உதிர்வு: 04 — 08 — 1994

## சவிரிமுத்து ஸ்ரெடிசியன்
(சூட்டி)

முத்துக்களின் வித்தான சவிரிதந்த வித்து
கொத்தாக விரிந்ததுவே மக்களிடையே பித்து
மறக்கவோ முடியுமா ஸ்ரெடிசியன் (சூட்டி) சத்து
உனது ஆன்மா சாந்தி பெற வியாகுலத் தாயை வேண்டி நிற்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

குளமங்கால்,
மல்லாகம்.

(42002)

உதயன்

## அளக்கவியலா அவலம்

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்தும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் இருந்தும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று உத்தேசமாகச்சொல்லப்படுகிறது.

கிளிநொச்சி நகரம் மீதான இராணுவத் தாக்குதல் தொடங்கப்படும் போது, தாமும் பாதிக்கப்படுவர் என்று அஞ்சி, நகரத்தின் பத்துமைல் விட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்களும் இடம்பெயர்ந்திருப்பர்.

அவ்வாறு பார்க்கும் போது இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்திருப்பர் என்று கணக்கிடலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடியிருப்பு வீடுகள் மிகக் குறைவு. அதே போன்று பாடசாலைகள், ஆலயங்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு. மற்றும் மண்டப வசதிகள் அரிதிலும் அரிது.

அதனால் இடம்பெயர்ந்த மக்கள் வீதி ஓரங்களிலும் மர நிழல்களிலும் தங்கியிருப்பதை விட வேறு வசதி கிடைக்காது. காடுகளுக்குள் தங்கும் பயங்கர அனுபவம் கூட இடம்பெயர்ந்தோரில் பலருக்குக் கிடைக்கும் என்று நம்பலாம்.

இத்தகைய ஓர் அவல நிலையில், அவர்களுக்கென இடம்பெயர்ந்த முகாம்களை அமைப்பதும், அவர்களுக்கு உணவு மற்றும் சுகாதார மருத்துவ வசதிகளைச் செய்வதும் தொண்டர் நிறுவனங்களுக்குப் பெரும் சிரமமானதும் சோதனையானதுமான காரியமாக இருக்கப்போகிறது.

இதனை அவர்கள் அனுபவத்தில் கண்டு கூறும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. கிளிநொச்சிப் பிரதேசத்தை அறிந்த எவருமே இலகுவில் அனுமானித்துவிடலாம்.

இப்போதைய இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டோரில் மிகப் பெரும்பான்மையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பலருக்குக் கிளிநொச்சியின் திக்குத்திசை சரியாகத் தெரியாது.

பதற்றம் அதிகரிக்கும் போது பாதை, திசை தெரியாமல், மந்துக்கும் காட்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் அடர்ந்த காடுகளுக்கே மாறிப் போகும் வாய்ப்பு உண்டு.

இத்தனைக்கும் மேலாக பாதிக்கப்பட்ட பகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கவில்லை என்றால் மக்களின் கதி என்னாகும்?

அவலம், கஷ்டம், பரிதாப நிலை என்ற பதங்களாலோ அல்லது வேறு எந்தச் சொற்றொடர்களாலுமோ அதனை அளந்துவிட இயலாது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி முல்லைத்தீவில் தாக்குதல் ஆரம்பமான பின்னர், கடந்த இரண்டு வாரங்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவில்லை.

இரண்டு மாவட்டங்களுக்கும் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் உண்டான தடங்கல் நிலை உடனடியாக நடைமுறை ரீதியாக நீக்கப்பட வேண்டும். அதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பாரும் செயல்ரீதியாக ஆதரவளிக்க வேண்டும். மற்றெல்லா நலன்களையும் விட மகளது உயிர் காக்கும் பணிக்கு முன்னுரிமை தரப்படவேண்டும்.

# முல்லைத்தீவில் புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் ஐ. தே. க. வழங்கியதாம்

## இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4

'முல்லைத்தீவு தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள்பயன்படுத்திய ஆயுதங்கள் அனைத்தும் கடந்த ஐ. தே. க. அரசினால் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களே'.

இவ்வாறு பாதுகாப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த ஆயுதங்கள் எல்லாம் 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவ ஹெலிக்கொப்டர் மூலம் விடுதலைப் புலிகளின் முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கையளிக்கப்பட்டவை என்றும்—

முல்லைத் தீவு இராணுவ முகாம் தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் நடத்தச் சென்ற மீட்பு இராணுவத்தினரும் முன்னர் தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரும் மேற்படி ஆயுதங்கள் தொடர்பாக தகவல்களைத் தெரிவித்துள்ளதாகவும்—

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் ''பயிவ் ஸீரோ'' ரக துப்பாக்கிகளையும் —

ரி- 56 ரக துப்பாக்கிகளையும் —

கைக்குண்டுகள் மற்றும் மோட்டார்களையும் உபயோகித்திருந்தனர்.

மேற்படி ஆயுதங்கள் அனைத்தும் கடந்த ஐ. தே. க. அரசினால் வழங்கப்பட்டவை தான் என்பதை தாம் அடையாளம் கண்டு கொண்டதாக இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்றும் கூறப்படுகிறது. (இ-3)

## வடபகுதிப் பெண் நுவரேலியாவில் கைது

கொழும்பு, ஓக. 4

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 19 வயது நிரம்பிய பெண் ஒருவர் நுவரேலியாவில் கடந்த 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

நுவரேலியா பஸ் தரிப்பு நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சமயமே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது உறவினர் வீட்டுக்கு வந்ததாக அப்பெண் விசாரணையில் தெரிவித்துள்ளார். (இ-3)

## ஜனாதிபதி தென்கொரியா விஜயம்

கொழும்பு, ஓக. 4

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இம்மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை தென்கொரியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். (இ-10)

## அன்பளிப்பு

குரு பூர்ணிமாதினத்தையொட்டி பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று பெண்மணி ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பருத்தித்துறை முனையைச் சேர்ந்த செல்வி சி. சுஜாதா என்பவருக்கே மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

அத்துடன் சுமார் பத்துப் பேருக்கு உபஉணவுப்பொருள்கள் நிவாரணமாகவும் வழங்கப்பட்டன.

சுவாமி சித்ருபானந்தா இவற்றை வழங்கினார்.

(அ-173)

## ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை: 1, 71, 800 பேர் தோற்றுவர்

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 800 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர்.

இவர்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 600 பேர் பாடசாலைகள் மூலம் தோற்றவிருக்கின்றனர். ஏனையோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆவர்.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சையை வடக்கு—கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் நடத்த சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் காமினி குணரத்தின தெரிவித்தார். (இ-3)

## வலி-வடக்கு, தெற்கில் நெருப்புக் காய்ச்சல்

வலிகாமம் தெற்கு, ஓக. 4

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் நெருப்புக் காய்ச்சல் அதிவேகமாக பரவி வருகின்றது.

மல்லாகம், கோட்டைக்காடு, சுன்னாகம் தெற்கு, உடுவில் கிராமங்களிலேயே நெருப்புக் காய்ச்சல் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நான்கு மாதங்களுக்குள் இப்பகுதிகளைச் சேர்ந்த 150-க்கும் அதிகமானோருக்கு நெருப்புக் காய்ச்சல் நோய் கண்டிருப்பதாகவும் —

இவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியவட்டார அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டிருந்த நால்வர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் வலிகாமம் பகுதிக்கு மீளக் குடியமர்ந்த போது. இந் நோய்க்கான உரிய மருத்துவ சிகிச்சை பெறாதது —

பொதுச் சுகாதார—சுத்தம் பேணாதது —ஆகியவை காரணமாகவே இந்நோய் பரவி வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கினற்று நீரை கொதிக்க வைத்துகுடிக்குமாறும், மலசல கூடத்தைப் பயன் படுத்துமாறும், மலசல கூடம்சென்று வந்தபின் கை, கால்களை சவர்க்காரம் போட்டு நன்கு கழுவுமாறும் பொதுச் சுகாதார சேவை அதிகாரி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ-152]

## கலைப்பீட மாணவர்

## விரிவுரைகளை ஒன்றாக நடத்துவதற்கு முயற்சி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு 95/96, 94/95 கல்வியாண்டுக்கு தெரிவான மாணவர்களுக்கான விரிவுரைகளை ஒன்றாக நடத்த பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சி எடுத்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து விரிவுரைகள் நடைபெறாததால் இழக்கப்பட்ட ஒரு வருட விரிவுரைகளை நிரப்பும் வகையில் இவ்விரு ஆண்டுகளுக்கும் தெரிவான மாணவர்களுக்கு ஒரே வகுப்புக்களில் விரிவுரைகளை நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக் கழக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (இ-3)

# ஈழத்து இலக்கியப் படைப்புகளின் காத்திரத்தைச் சாற்றிய பேரரங்கு



## மூத்த எழுத்தாளர் வரதருக்குப் பாராட்டு

கடந்த மாதம் 5, 6, 7ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்திய இலக்கியப் பேரரங்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது.

இ. மு. எ. ச. பொதுச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் பெருந் திரளான இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் கலைஞர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த மூன்று நாள் பேரரங்கின் முதல் நாள் நிகழ்வின்போது ஈழத்து ஆக்க இலக்கிய துறைகளின் அரை நூற்றாண்டு கால வளர்ச்சிப் போக்குகள் பற்றி இலக்கிய ஆய்வாளர்களும், அறிஞர்களும் மதிப்பீடு செய்தனர்.

அரங்கில் இ. மு. எ. சங்கத்தின் நான்கு தசாப்த வரலாற்றை பற்றி இந்த அமைப்பின் செயலாளர் என். சோமகாந்தன் நீண்ட அறிமுக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பலரும் கருத்துரையாற்றும் போது ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றியும், அதன் தடைக் கற்கள் பற்றியும் எடுத்துரைத்தனர்.

அன்றைய தினம் ''புதுமை இலக்கியம்'' சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதே தினம் மாலை இ. மு. எ. சங்கமும், தினகரனும் நடத்திய சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்பு நடைபெற்றது.

தமிழகத்தைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணன், நாவலாசிரியர் பொன்னீலன், இலக்கிய விமர்சகரும் ''தாமரை'' இதழின் பொறுப்பாசிரியருமான எஸ். மகேந்திரன் ஆகியோர் இப்பேரரங்கில் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர்.

இரண்டாம், மூன்றாம் நாள்களில் முழு நாள் ஆய்வரங்குகள் இடம் பெற்றன. பேராசிரியர் கா சிவத்தம்பி, பேராசிரியர் சி. தில்லைநாதன் ஆகியோர் இவற்றை முறையே துவக்கி வைத்தனர்.

ஈழத்தின் சிறுகதை, நாவல், கவிதை இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றி அடுத்த இரண்டு நாள் நிகழ்வில் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

### வரதருக்குப் பாராட்டு

மூன்றாம் நாள் இறுதி நிகழ்வாக ஈழத்தின் மூத்த எழுத்தாளர் வரதர் பாராட்டப்பட்டார்.

அவரது இலக்கியப் பணியைப் பாராட்டி, தி. க. சிவசங்கரன், பாலுமகேந்திரா, நாவலாசிரியர் சு. சமுத்திரம் மற்றும் பலர் தமிழகத்திலிருந்து அனுப்பி வைத்த வாழ்த்துக்கள் வாசிக்கப்பட்டன.

பின்னர் வரதர் எழுதிய இரு நூல்களான ''வரதர் கதைகள்'' ''மலரும் நினைவுகள்'' ஆகிய இரு நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பல இலக்கியவாதிகள், அறிஞர்கள், கலைஞர்கள், தலைவர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஒன்று திரண்டு சிறப்பித்த நிகழ்வாக இந்த மூன்று நாள் பேரரங்கு அமைந்தது. நாடு முழுவதிலிருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் இதில் பங்குபற்றினர்.

இப் பேரரங்கின் ஊடாக எழுத்தாளர் பணி, படைப்பாளிகள் சந்திக்கும் கஷ்டங்கள் என்பன உணர்த்தபபட்டன.

ஈழத்து இலக்கியப் படைப்புக்களின் காத்திரம் வெளிப்படுத்தப்பட்டது.

தமிழ் மக்கள் தற்போது படும் துயரங்கள் இதில் எதிரொலிக்கத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

## கலைப்பீட சங்கீதத் துறைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட சங்கீதத் துறைத் தலைவராக விரிவுரையாளர் திரு. எஸ். பத்மலிங்கம் இம் மாதம் முதலாம்திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சங்கீதத்துறையின் தலைவராக முதன்முறையாக சங்கீதத் துறையைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை — சங்கீதத் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் மீண்டும் தமிழ்த் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3)

## சாவகச்சேரியில் டீஸல் விநியோகம்

தென்மராட்சி, ஓக. 4

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் வாகனங்களுக்கு டீஸல் வழங்கப்பட்டு வருகிறது.

பிரதேச செயலரினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களுக்கே டீஸல் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# வெகுஜன தொடர்புச் சாதனங்களை அரசாங்கம் கட்டுப்படுத்துகிறதா?

## இல்லை என்கிறார் அமைச்சர் தர்மசிறி

"வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை அரசாங்கம் கட்டுப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படும் கூற்றில் உண்மை எதுவும் இல்லை"

இப்படி வெகுஜனத் தொடர்பு, சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க கூறினார்

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெளியிடும் செய்திகளின் உண்மை நிலைமையை தீர்மானித்துக் கொள்ளும் ஆற்றல் பொதுமக்களுக்கு உண்டு.

வெகுஜனத் தொடர்பு துறையாளர்கள் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கெண்டு அவர்களின் விருப்பத்துக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை பத்திரிகை மன்றம் தகவல் திணைக்களத்தின் அநுசரணையுடன் கேகாலையில் நேற்று நடத்திய கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இக்கருத்தைத்தெரிவித்தார். (இ-3)

# தமிழ் நாடடில் 9 கொள்ளையர்கள் பொதுமக்களால் அடித்துக் கொலை

## விசாரணை நடக்கும் என்கின்றார் கருணாநிதி

சென்னை, ஒக. 4

தமிழ்நாடு, பெரியார் மாவட்டம், சின்னமோடரப்பட்டி என்ற இடத்தில் 9 கொள்ளைக்காரர்கள் பொமக்களால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என முதலமைச்சர் மு கருணாநிதி தமிழ்நாடு சட்டப்பேரவையல் நேற்றுத் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து எதிர்க் கட்சித் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் உட்பட 16 உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தனர்.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர் — மாநிலத்தில் மக்களுக்குத் தேவையான அளவு காவலர்களும் காவல் நிலையங்களும் இல்லாததால் இத்தகைய சம்பவங்கள் நடக்கும் இடங்களுக்கு காவலர்கள் உடனடியாகச் செல்ல முடியாது உள்ளது என்றும்—

இந்தநிலை இந்தியா முழுவதும் இருக்கிறது என்றும்—கூறினார்.

காவல் நிலையங்களும் காவலர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் எனத் தெரிவித்த முதலமைச்சர் காவல் பணியில் உள்ளோர் விழிப்புடன் பணியாற்ற வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். (இ-5)

# விமானம் மூலம் யாழ். வர புதிய நடைமுறை அமுல்

கொழும்பு, ஒ . 4

கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருவோர் தமது விண்ணப்பங்களை இனி பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என திட்டமிடல் இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருவோர் இதுவரை திட்டமிடல், இனவிவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்கே விண்ணப்பித்து வந்தனர்.

கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் —

கடந்த 19 ஆம் திகதிக்குப் பின்னர் திட்டமிடல் இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் செல்லுபடியாகாது என்றும்—

அவர்கள் மீண்டும் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்றும் —

அரசாங்க திணைக்களத்தின் ஊழியர்கள் தத்தமது திணைக்கள தலைவர்கள் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சட்டமா அதிபரின் சரத்து தெரிவுக்குழு விவாதிக்கும்

கொழும்பு, ஒக. 4

நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் மக்களின் இறைமை சம்பந்தமான புதிய சரத்து ஒன்று சட்டமா அதிபரினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம எதிர்வரும் 8ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

சட்டமா அதிபரினால் தயாரிக்கப்பட்ட இந்தச் சட்ட வரைவு குறித்து அன்றைய அமர்வில் விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

# நள்ளிரவு வீடு புகுந்த இருவர் நடத்திய தாக்குதல்

## இளம்பெண், மற்றொருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக. 4

நள்ளிரவு நேரம் வீட்டினுள் நுழைந்த அறிமுகமில்லாத இருவர், அங்கிருந்த இளம் பெண் ஒருவரையும், அவரைக் காப்பாற்ற வந்த மற்றொருவரையும் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர்.

நுணாவில் மேற்கில் நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த பஞ்சலிங்கம் சுபாஜினி (வயது 17), சந்திரகுமார் யோகநாதன் (வயது 44) ஆகிய இருவருமே அடிகாயங்களுக்குள்ளானவர்களாவர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

சம்பவதினம் வீட்டினுள் நுழைந்த குறிப்பிட்ட இருவரும் அந்த இளம் பெண்ணை வெளியே இழுத்து வந்த போது அப் பெண் கூச்சலிட்டாராம்.

அதனைக் கேட்ட அயல் வீட்டுக்காரர் ஓடி வந்து அவர்களைத் தடுக்க முற்பட்ட வேளை இருவரையும் சேர்த்து மோசமாகத் தாக்கினர் என்றும் —

இந்தக் கலவரத்தை அடுத்து அங்கு அயலவர்கள் பலர் ஒன்று கூடவே, அறிமுகமில்லாத அந்த இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் இளம் பெண் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் மற்றவர் யாழ். போதனா வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (இ-15)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 04-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### திருமலை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின இலச்சினை அச்சிடப்பட்டிருந்ததாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும்—

தமது எதிரியான அரசுடன் போரிட போர்க்களம் புகுமாறும் —

புலிகளுடன் இணைந்துஎதிரிகளை அழித்தொழிக்க போரிட வருமாறும் —

இச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் "தினமின" பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (உ-10)

### உணவு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து உணவு லொறிகள் மேற்கண்ட இரு மாவட்டங்களுக்கும் செல்ல படையினரால் அனுமதிக்கப்படவில்லை.

இதனால் மேற்கண்ட இரு மாவட்டங்களிலும் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது.

"உண்மை வெற்றி" இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பட்டினி நிலையை எதிர் நோக்கி இருந்தனர்.

நேற்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் ஓமந்தையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி லொறிப் போக்குவரத்துக்கான இறுதி ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

### காலிமுகத்திடல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அறிவதற்கும் —

பல்வேறுபட்டவர்கள் காலிமுகத் திடலுக்கு வருவதாக சந்தேகிப்பதால் சகலரையும் சோதிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது (இ-5)

# மட்டக்களப்புப் பகுதியில் இரு படையினர் காயம்

கொழும்பு, ஒக. 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குருக்கள் மடத்தில் விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் 2 அதிரடிப் படையினர் காயமடைந்தனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது. (இ-3)

### தீர்வுத் திட்டத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கும் திட்டத்தின்படி சிறுபான்மைத் தமிழினத்துக்குக் கூடிய தன்னாட்சி உரிமைகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

இத்திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பிராந்திய சபைகள் மூலம் வடக்கிலும் கிழக்கிலும் அதிகமாக வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு பிராந்திய விடயங்களை முழுமையாக நிர்வகிக்கும் அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும்.

ஆனால் பழமைவாதிகளான சிங்களத் தலைவர்கள் இந்தத் திட்டத்தைக் கண்டிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் பல ஆண்டுளாகக் கேட்டுவந்தது போல நாட்டை இன அடிப்படையில் கூறுபோடும் வேலைக்கு இத்திட்டம் துணைபோகும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

மிதவாதத் தமிழ்க் கட்சிகளும் இத்திட்டத்துக்கு ஆதரவாக இல்லை. அவற்றுக்கும் அது திருப்தியாகவில்லை.

#### உலக்கை தேய்ந்து உளிப் பிடியானது

கடந்த ஒகஸ்டில் வெளியிடப்பட்ட இத்திட்டம் "உலக்கை தேய்ந்து உளிப் பிடியானது போல்" சென்று விட்டது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

தற்போது இருக்கின்ற திட்டம் உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு போதுமானதல்ல என்பது அவர்களது வாதம்.

#### நலிந்த பெரும்பான்மை

சென்ற மார்ச் மாதம் தொடக்கம் அனைத்துக்கட்சி தெரிவுக்குழு கூடி இத்திட்டத்தைப்பற்றி கலந்து பேசிக் கொண்டு வருகிறது

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வாரமும் செய்தியாளர் மாநாட்டிலே அத்தெரிவுக் குழு முன்னேற்றம் எதுவும் பெரிதாக ஏற்படவில்லை என்ற செய்தியையே கூறிவருகின்றது.

அரசின் இத்திட்டம்கனியாவதற்கு முக்கிய ஒரு தடைக்கல்லாக இருப்பது அரசின் நலிந்த பெரும்பான்மைதான்.

இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்க வேண்டுமென்றால் அரசுக்கு சிறுபான்மைத் தமிழ் — முஸ்லிம் கட்சிகளின் ஆதரவோடு எதிர்க் கட்சியான ஐ. தே.க. வின் குறைந்தது பன்னிரண்டு எம். பிக்களின் ஆதரவு கிடைக்க வேண்டும். ஆனால் அந்த ஆதரவோ கிடைப்பதாகத் தெரியவில்லை.

அரசியல் சாசனத்தின் கீழ் இலங்கை ஒரு தேசமாக இருக்கவேண்டும். அதை பிராந்தியம் பிராந்தியமாகப் பிரித்து ஐக்கிய இலங்கை பிராந்தியங்கள்என்ற அமைப்பாக மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறது ஐ. தே. கட்சி.

ஆனால் இலங்கையைப் பிராந்தியங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றுக்கும் தன்னாட்சி அதிகாரம் வழங்காமல் சிறுபான்மை இனங்களைத் திருப்திப்படுத்த முடியாது

#### பீரிஸ் கூறுவது

வடக்கே விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்ற போதிலும் இலங்கை அரசு தனது அதிகாரப் பகிர்வுத்திட்டத்தில் இன்றும் விசுவாசமாகவும் நேர்மையாகவும் இருந்து வருகிறது என்று அரசமைப்புக்குப் பொறுப்பான அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மீண்டும் கூறியிருக்கின்றார்.

அத்துடன் இந்த அதிகாரப் பகிர்வுத்திட்டம், அங்கீகாரம் பெற எவ்வளவு தாமதம் அடைகின்றதோ அவ்வளவுக்குப் போர்தொடரும். அது நாட்டின் பொருளாதாரத்தால் தாங்கமுடியாத அளவுக்கு இருக்கும் என்றும்அமைச்சர் பீரிஸ்கூறுகிறார்.

நாட்டின்பாதுகாப்புச் செலவினங்களுக்கு நிதிவழங்குவதற்காகப்பல தியாகங்களைச் செய்ய வேண்டி ஏற்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே கூறியிருக்கிறார்

சென்ற மாதம் உணவுப் பொருள்களுக்கான உதவித் தொகையை குறைக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். அதைவிட பல கஷ்டங்களை மக்கள் சுமக்க வேண்டி வரும் எனவும் அவர் எச்சரித்திருந்தார்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### இடதுசாரிகள்—..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனப் பிரச்சினைத் தீர்வுத் திட்ட விவகாரத்தில் அரசுக்குள் ஓர் இணக்க நிலை ஏற்படுவதை முறியடிக்கும் விதத்தில் லலித் அணியினர் குளறுபடிப்போக்கைக் கடைப்பிடிப்பதாக அரசு உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதே சமயம் —

நாட்டின் பாதுகாப்புச் சம்பந்தமான முக்கிய அம்சமான — அவசரகாலச் சட்ட நீடிப்பு விடயத்தில் — அரசுக்கு முற்றிலும் மாறான போக்கை இடதுசாரிகளான சமசமாஜக் கட்சியினர் பின்பற்றி வருகின்றனர்.

இந்த விடயத்தில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அரசுத் தரப்பு எம். பியான வாசுதேவ நாணயக்காரா விடாப்பிடியாக இருக்கின்றார்.

"நாங்கள் சமசமாஜக் கட்சியின் கொள்கைகளை நிறைவேற்றுமாறு கேட்கவில்லை. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை நிறைவேற்றுமாறே கேட்கின்றோம். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முக்கிய பொறுப்பை வகிப்பவர்கள் முன்னணியின் கொள்கைகளை நிறைவேற்றுவார்கள் என நம்புகிறோம். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் சமயத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டது எங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. இருப்பினும் எதிர்காலத்தில் இன்னும் பல விடயங்கள் குறித்து ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அரசில்பங்கேற்றுள்ள ஏனைய கட்சிகள் தங்கள் கட்சி ரீதியில் கொடுக்கும் அழுத்தங்களின் மூலம் அரசை நேர்வழிக்குக் கொண்டுவரலாம் என நம்புகிறோம்" — என்று வாசுதேவ நாணயக்காரா தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அரசுக்குள் இடதுசாரிக் கட்சிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே அடிக்கடி உருவாகும் கருத்து முரண்பாடுகளை உற்று நோக்கும்போது இடதுசாரிகள் அரசில் தொடர்ந்து இருப்பார்களா அல்லது வெளியேறுவார்களா என்பதைக் காலம் தான் தீர்மானிக்கும் என்பது விமர்சகர்களின் கருத்து என்று பி. பி ஸி. குறிப்பிட்டது. (உ-10)